12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது</u>

# பிறவிப் பெருங்கடல் கடக்கும் தோணிப் பயணத் துவக்கம்

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 சித்திரை மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“பிறவிப் பெருங்கடல் கடக்கும் தோணிப் பயணத் துவக்கம்”** - 28-04-1984இல் திருச்சி திரு பரதேசி முருகன் என்பவருக்கு குருதேவர் வரைந்த அஞ்சல்.
2. **“திருவருட்பணியில் பங்குபெற விடுக்கும் திருவோலை”** - 28-04-1984இல் திருச்சி திரு இராசேந்திரன் என்பவருக்கு குருதேவர் வரைந்த அஞ்சல்.
3. **“திருச்சி மாவட்ட அருளாட்சிப் பணி அழைப்புத் திருவோலை”** - மே 1984இல் திருச்சி திரு பிரபாகரன் என்பவருக்கு குருதேவர் வரைந்த அஞ்சல்.
4. **“செயல்விளக்க ஊக்க அறிவுரை ஆணை”** - 16-03-1984இல் மதுரைச் சித்தரடியான் திரு வேம்படியான் மணி அவர்களுக்கு குருதேவர் எழுதிய அஞ்சல்.
5. **“செயல்நலம் பாராட்டு மடல்”** - 5-4-1984இல் திருவள்ளூர் திரு டில்லி என்பவருக்கு குருதேவர் எழுதிய மடல்.
6. **“வளவளர்ச்சி வழிகளைச் சிந்தித்து உருவாக்க வேண்டும் திருவோலை”** - 2-6-1984இல் மதுரைச் சித்தரடியான் திரு அழகுமலைப் பிள்ளை அவர்களுக்கு குருதேவர் எழுதிய அஞ்சல்.
7. **“அருளுலக இளவரசுகள் அறிவிப்புப் பயண வெற்றி நன்றி மடல்”** - 25-6-1984இல் பாளையங்கோட்டைச் சித்தரடியான் திரு செந்தில்ராசு அவர்களுக்கு குருதேவர் எழுதிய அஞ்சல்.
8. **“அருளாட்சிக்கான தீரத் தியாகத் திட்ட விளக்க மடல்”** - 7-3-1985இல் ஒரிசாவில் இருந்த சுந்தரராமனுக்கு குருதேவர் எழுதிய அஞ்சல்.
9. **“நாம் ஏன் சூத்திரன்”** - ‘விடுதலை’ பத்திரிகையில் 1984இல் வெளியான, பெரியார் அவர்களின் உரையின் ஒரு பகுதி.

# பிறவிப் பெருங்கடல் கடக்கும் தோணிப் பயணத் துவக்கம்

28-04-84இல் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், அரசயோகி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு, இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, தமது திருக்கூட்டத்தார்களோடு துவக்கியிருக்கும் **பிறவிப் பெருங்கடல் கடக்கும் தோணிப் பயணத் துவக்க அறிவிப்பழைப்புத் திருமடல்**.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

“இருளும் ஒளியும் இறைவனைப் புரிந்தார்க்கில்லையெனும் குருவாசகம் புரிந்து வாழக் குருதேவர் வரும் காலம் உதவும். தெரிந்தால் தெரிந்து, புரிந்தால் புரிந்து செயல்படுக.”

**- கருவாசகம்.**

2) “பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற்பட்ட வாழ்வியல்களைப் புரிவதில்தான் கரு, குரு, தரு, திரு, உலக அருளாளர், அருவ, உருவ, அருவுருவத் தாத்தாக்கள் ஆத்தாக்கள் முதலியோரின் நிலைகள் விளங்கிடும்.”

**- குருவாசகம்.**

3) “அகவாழ்வும், புறவாழ்வும் அள்ளித் தரும் அல்லலும், அவலமும், கேவலமும், ஏக்கமும், சீற்றமும் ... உருவாக்கும் ஆலயம்தான் தனிமனித சித்திக்கும் முத்திக்கும் வித்திடும்.”

**- தருவாசகம்.**

4) “குருவழியாக அனைத்தும் திருவாக்கி முத்தி காண்பதே இறவாயாக்கைப் பெரியோனாகும் வழி.”

**- திருவாசகம்.**

5) “தன்னை யறிந்து தலைவனை யறிபவனும்; தலைவனை யறிந்து தன்னை யறிபவனும் முன்னைப் பழவினைகளில் உழலாமல் பின்னைப் பிறப்புக்களுக்கும் துணையாகும் பரம்பொருளாய் உருவாகிடுவான். அதற்குத் தன்னைக் கடவுளின் ‘தாயாக, தாரமாக, தானீன்ற மகளாக, தானேற்ற தோழனாக, தனது சேவகனாக, தனது தொண்டனாக, தனது நண்பனாக’ ... அறியாமல் ஆட்படுத்தும் பரிபக்குவம் பெறல் வேண்டும்.”

**- குருபாரம்பரிய வாசகம்.**

6) இச் சில வாசகங்களைத் திருவருட்செல்வர் E.பரதேசி முருகன் (26-B, இரவுத் தெரு, பெரிய மிளகு பாறை, திருச்சி-1) அவர்களுடைய சிந்தனைக்கு வழங்கிச் சித்தர்நெறி மிகத் தெளிவாக எழுதி முடிக்கப்பட்ட எண்ணற்ற இலக்கியங்களையுடைய ஒன்று என்ற பேருண்மையை அறிவித்துச் சித்தர்நெறி யெனும் இந்துமதம் தழைக்க உழைக்க அழைப்பு விடுக்கப்படுகிறது. அதாவது, சித்தர்நெறி எனும் தத்துவத்தின் முழுமையான செயல்வடிவமான இந்துமதத்தால் தானும் நன்மையடைந்து பிறரையும் நன்மையடையச் செய்யுமாறு வேண்டப்படுகிறார் திருவருட்செல்வர் E.பரதேசி முருகன். ஏனெனில், இவர்களின் முன்னோர்களும், பழம்பிறப்புக்களும் அருட்சோலையில் பயிரான கனி மரங்களே!

7) இன்றைய அலங்கோல கேவல அவசர உலகியல் போக்குகளிலிருந்து வருங்காலத்தைக் காப்பாற்றும் மாபெரும் அருளுலகப் பணிகள் துவங்கி விட்டன. இப் புவிப்பரப்பில் வாழும் மானுடர்களில் அருளுலகுக்கு உரியவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு உரிய பயிற்சிகளைச் செய்து தயாராகும் ஏற்பாடுகள்

30 ஆண்டுக் காலமாக நடக்கின்றன. மதப்பூசல்களும், சண்டைகளும், போர்களும் இல்லாமல் மத ஒற்றுமையும், மத மறுமலர்ச்சியும், மதவழிப் பேரரசும் அமைக்கும் பணிகள் விரிந்தும் விரைந்தும் நிகழுகின்றன. இமயம் முதல் குமரி வரை உள்ள மலைகளும், காடுகளும், படுகைகளும்; பாசறைகளாக, பாடிவீடுகளாக, உலைக்கலங்களாகச் செயல்பட ஆரம்பித்து விட்டன. தங்களின் பங்கினையும் வழங்குவோர்க்காக நல்குக. 6/5/84 முதல் 8/5/84 முடிய எமது திருச்சி மாவட்டச் சுற்றுப்பயணம் அணிபெற அருகிலிருந்து உதவுக.

அன்பு

**இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம்,**

**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி.**

**<u>நகல் நல்குபவர்</u>**:- அருள்மிகு பசிய இளந்தலைகளை மாலையாக அணிந்த கபாலீசுவரி சன்னிதானம், சித்தர் மகன், வடபுலத்துக் கொள்கை பரப்புச் செயலாளர், சித்தரடியான் சீ.மோகன், புவனேசுவர், ஒரிசா, 22.09.1987.

S.Mohan B.Sc., B.Tech., 28, Sahid Nagar, Bhubaneswar-751007.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல் ஒரிசா சித்தரடியான் திரு சீ. மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

28/4/84,

சென்னை-11,

தலைமை அலுவலகம், குருதேவர் இல்லம்.

# திருவருட்பணியில் பங்குபெற விடுக்கும் திருவோலை

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் சித்தர்நெறி தழைக்க உழைக்க வருமாறு திருவருட்செல்வர் P.இராசேந்திரன் [திருமுருகன் இல்லம், 149, நடுக் கம்மாளத் தெரு, திருச்சி - 620008] அவர்களை அழைக்கும் திருவோலை.

2) காலப்போக்கில் உண்மையான இந்துமதம் பல்வேறு மதங்களை ஈன்றெடுத்த போதும்; தனது மாறா இளமையும், வளமையும், வாலிப்பும், பொலிவும், வலிவும் கொண்டு நிலையாக உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்குரிய பணிகளைச் செய்து வருகின்றது. இது, யாரையும் மூடராக, முட்டாளாக, அப்பாவியாக, அடிமையாக, ஏமாளியாக, கோமாளியாக, ஏழையாக, கோழையாக ... இருக்க அனுமதிப்பதே இல்லை. எனவேதான், உரிமைக்கும், விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும், தன்மானத்திற்கும், தன்னம்பிக்கைக்கும், பெருமைமிகு தனிவாழ்வுக்கும் தூண்டுகோலாகவே இருந்து வருகிறது இந்துமதம்.

3) ஞானிகளும், மகான்களும், தவசிகளும், பிற அருளாளர்களும் இந்துமதத்தின் அருமை பெருமைகளேயும், அரிய பெரிய சீரிய பயன்களேயும், ஆழமிகு நலம் நல்கும் பண்புகளேயும், அறம் விளேவிக்கும் மறச் செயல்களேயும், சுறுசுறுப்பை நல்கும் அருமருந்தான ஆற்றல்களேயும் ... அநுபவப் பூர்வமாக வழங்கியே இப் பூவுலகிலும், பிற உலகிலும் அருளொளி பரவச் செய்கின்றனர். இப் பேருண்மையுணராதார் எதிர்பாராமல் இந்துமதத் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் மாறி இந்துமதத்துக்கே தீங்குகள் செய்ய ஆரம்பித்து விட்டனர். இது எதில் போய் முடியுமென்ருல்; எல்லா மதங்களும் உற்பத்தியாகும் பெரிய ஊற்றினேப் பாழ்படுத்தும் முயற்சியால் அனேத்து மதங்களும் கேடுறும் நிலேயையே உருவாக்கும். நாத்திகர்களும் இதனேயே செய்கின்றனர். இதனேத் தடுக்கும் பணியே எமது பணி.

4) மதத்துறையில் எழுப்பப்படும் எல்லா விணுக்களுக்கும் விடைகூறும் ஆற்றலும்; எல்லா ஐயங்களேயும் அகற்றும் விவேகமும்; எல்லா அறியாமைகளேயும் எதிர்த்துப் போராடும் தீரமிக்க வீரமும்; மனித வாழ்வின் உணர்வுகளுக்கும், ஏக்கங்களுக்கும், எரிச்சல்களுக்கும், எல்லாப் புரியாமைகளுக்கும் ... முழுமையாகப் பதில் கூறும் தரமும் திரமும் உரமும்; ... இந்துமதத்துக்குதான் உண்டு. அதுவும் உண்மையான இந்துமதத்துக்குத்தான் இவ்வாற்றல் உண்டு. அதாவது, பதினெண்சித்தர்களின் சித்தர்நெறிக்கே சொல்லளவிலும், செயலளவிலும் மதத்துறைக்குரிய அனேத்து விளக்கங்களும் வழங்கிடும் பேராற்றல் உண்டு. எனவேதான், தங்களேப் போன்ருேர்

சித்தர்நெறி காக்கவும், செழிக்கச் செய்யவும் முயற்சிக்குமாறு அழைப்பு விடுக்கிறோம்.

5) நம்மை நாடி வருபவர் அனைத்தையும் அநுபவப் பொருளாக அடையலாம். 5/5/84 மாலை சென்னையிலிருந்து தஞ்சை வழியாகத் திருச்சி வந்து உங்களுடன் சுற்றுப் பயணங்கள் செய்து 8/5/84 இரவு மலைக்கோட்டை விரைவு வண்டியில் சென்னை திரும்புகின்றோம். அனைத்தும் சிறப்புற எம்மோடு இருந்து செயல்பட அழைக்கிறோம்.

**அன்பு**<br>
**இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம்,**<br>
**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**<br>
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**<br>
**28/4/84.**

**//உண்மை நகல்//**

**<u>நகல் நல்குபவர்</u>**: அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணி, வேம்படிதாளம்-637504.

**//இதன் மூல நகல்: வேம்பை சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# திருச்சி மாவட்ட அருளாட்சிப் பணி அழைப்புத் திருவோலை

அருளுலக இருளகற்றிப் பகுத்தறிவு வழியில் தொடர்ந்து செயலாற்றும் திருவருட் செல்வர் அருள்மிகு சந்தனக்கருப்பர் சன்னிதானம், மருளாடுநாயகம் S.பிரபாகரன் [தென்னூர் மருளாளி, 54A, தென்னூர் ஐரோடு, திருச்சி-17] அவர்கள் சமூகத்துக்கு அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், அரசயோகி, ஞாலகுரு சித்தர் கருவூறார் விடுக்கும் அருளாட்சிப் பணி அழைப்புத் திருவோலை.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! பல்வேறு அலுவல்களால் விரைந்து அஞ்சலனுப்ப இயலவில்லை.

2) தங்களின் பேரார்வமும், பெருந்திறனும், பகுத்தறிவுப் போக்கும், தமிழினப் பற்றும், மக்களுக்குத் தொண்டாற்றும் நோக்கும் விதந்து பாராட்டி வாழ்த்தப் படுகின்றன.

3) பொருளுக்கு அருளை விற்காமல் செயல்படும் தங்களின் தரமும், திரமும், தீரமும், மறமும், அறமும் அருளுலக மறுமலர்ச்சிப் பணிகளுக்குப் பேருதவி புரியுமென்று நம்புகிறோம், வாழ்த்துகிறோம்.

4) இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இலைமறைகாயாகவே இருந்திட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ.), அருட்பணி

விரிவாக்கத் திட்டம் (அ.வி.தி.), அருளுலக ஆர்வலர் கழகம் (அ.ஆ.க.), உலக அருளாளர் திருச்சபை (உ.அ.தி.ச.), கடவுளை வழிபடுவோர் கழகம் (க.வ.க.) ... அமைப்புக்களால் மலைகளிலும், காடுகளிலும், ... தனிமைத் தவத்தில் மூழ்கித் தாங்கள் மட்டும் பயனடையும் திருவருட்செல்வர்கள்தான் மிகுந்திட்டார்கள். இதனால், இவ்வுலக முதல் மதமும், மூல மதமுமான இந்து மதம் அதனுடைய குழந்தைகளாகப் பிறந்த மதங்களாலேயே நலிவும், சிதைவும், சீர்குலைவும் அடைய நேரிட்டு விட்டது.

இவற்றைத் தடுத்து நிறுத்தி இந்துமத மறுமலர்ச்சிப் பணிகளைச் செய்யவே யாம் அனைத்துக் கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள், உலக அருளாளர்கள் ... முதலியோர்களால் ஏவப்பட்டுள்ளோம். எனவே, தங்களைப் போன்றோர் எம் பணி அணிபெற ஆவன செய்ய அழைப்பு விடுக்கிறோம்.

5) யாம், 5/5/84 மாலை சென்னையிலிருந்து இராமேசுவரம் விரைவு வண்டியில் புறப்படுகின்றோம். 6/5/84 காலை திருச்சி புகைவண்டிச் சந்திப்பில் உங்களைக் கண்டு உங்களுடனேயே மூன்று நாட்கள் அருட்பணிச் சுற்றுக்கள் நிகழ்த்துகிறோம். மீண்டும் 8/5/84 மாலை திருச்சி மலைக்கோட்டை விரைவு வண்டியில் சென்னை திரும்புகிறோம்.

இம்மூன்று நாட்களிலும் இந்துமத வரலாறு, தத்துவம், சித்தம், இலக்கியங்கள், எழுதாக் கிளவிகள், நம்பிக்கைகள், நடைமுறைகள், பிற பழக்கவழக்கங்கள் ... முதலியவற்றின் பயன்கள் விளக்கப்படும். உலக மானுடநல முயற்சிப் பணியே இந்து மறுமலர்ச்சி இயக்கப் பணி என்பதைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படத்

தாங்கள் அவசியம் எம்மோடும், எம்மவர்களோடும் இணைந்து செயல்பட வேண்டும்.

**யாம் ஓர் மாபெரும் இயக்கம்.**

**எம் கடன் பணி செய்து கிடப்பதே.**

**அருளை அநுபவப் பொருளாக்குவதே எம் வாழ்வு.**

**அன்பு**

**இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**

**//உண்மை நகல்//**

**<u>நகல் நல்குபவர்</u>:-**

அருள்மிகு வேம்படிதாளம் காமகோடி பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி, 2/24, புதிய வீதி, வேம்படிதாளம் - 637504.
4 May 1984.

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

பொன்னேரி,
16.3.84.

# செயல்விளக்க ஊக்க அறிவுரை ஆணை

அருள்மிகு ஆலவாய் செல்லத்தம்மன் சன்னிதானம் வேம்படியான் மணி [Plot No.10, J3 Road, நியூ எல்லிசு நகர் எக்ச்டென்சன், மதுரை-625010] அவர்களுக்கு இன்றைய ஞாலகுரு, ஞானகுரு, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் சித்தர் கருவூரூர் வரையும் மடல்.

1) தங்களுடைய 13.3.84ஆம் நாளைய அஞ்சல் கிடைத்தது. படித்தோம். மிக்க மகிழ்ச்சி. தமிழினத்திற்கு வாழையடி வாழையென வரும் குருபாரம்பரிய வழியில் வந்த குருதேவரே தொண்டாற்ற முன்வந்தும் கூடத் தமிழர்களை ஒன்று திரட்டிட முடியவில்லை. காரணம், தமிழர்களுக்கு உண்மையான தமிழ் உணர்ச்சி இல்லை. இனப்பற்றோ, நாட்டுப்பற்றோ இல்லை. தமிழனுக்கு தமிழனே தலைவனாகவில்லை. தலைவராக இருப்பவர்கள் பெரும்பாலானவர்கள் புகழ்வெறி, பொருள்வெறி, பதவிவெறி, போட்டி, பொறாமை முதலியவைகளால் தமிழ்ச் சமுதாய விரோதிகளாகவும், துரோகிகளாகவும் இருக்கிறார்கள். மேலும், தமிழ்நாட்டிலுள்ள சமய, சமுதாய, கலை, இலக்கிய, தொழில் துறைகள் அனைத்துமே தமிழ்ப் பற்றில்லாதவர்களிடமும், அன்னியர்களிடமும், தமிழினத் துரோகி விரோதிகளிடமே சிக்கிக் கிடக்கின்றன.

எனவேதான்,

**“இந்துமதமே உன் குருதேவரை புரிந்து கொள்”;**

**“இந்துக்களே குருவழி நின்று செயல்படக் கற்றுக் கொள்ளுங்கள்”;**

**“இந்துமதத்தின் மூலவர்களான தமிழர்களின் ஒற்றுமையும், விழிச்சியும், எழுச்சியும், செழுச்சியுமே இந்துமதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்ய முடியும்”;**

**“இந்துமத வரலாற்றையும், இலக்கியங்களையும், நடைமுறைகளையும் முறையாக முழுமையாக உணர்தலும் உணர்த்துதலுமே இந்துமதத்தைக் காப்பாற்றும்”;**

**“இந்துமதத்தைக் காப்பாற்றுவதே இந்தியாவைக் காப்பாற்றும்”;**

**“இந்துமதமே தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும்”;**

**“இந்துமதமே உலக ஒற்றுமை, சமத்துவம், பொதுவுடமை, அமைதி முதலியவைகளை உருவாக்கும்”;**

**“இந்துமதமே அருளை அநுபவப் பொருளாக வழங்கி தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு என்ற முக்கோணக் கோட்டையை வலிமைப்படுத்தும்”;**

... ... இப்படியெல்லாம் எழுத்தாலும், பேச்சாலும், அச்சிட்ட அறிக்கைகளாலும் கடந்த பன்னிரண்டாண்டுக் காலமாக செயல்பட்டும், உரிய பயன் விளையவே இல்லை, இல்லை, இல்லை. ... இதனை **நாமனைவரும் புரிந்து பொறுப்போடு செயல்பட்டே ஆக வேண்டும், யாம் உட்பட**.

2) இன்றுவரை தங்களுக்கு அனுப்பப்பட்ட எந்த அஞ்சலுக்கும் கட்டுரைக்கும் நகல் வரவே இல்லை, இல்லை, இல்லை. **இதனை யாம் வன்மையாகக் கடுமையாகக் கண்டிக்கிறோம்**. உடனடியாக **<u>இனிமேலாவது நகல்களை அனுப்புங்கள். எச்சரிக்கை.</u>**

3) நாம் தனிமனித நெஞ்சப் புரட்சி, சிந்தைப் புரட்சி என்னும் இரண்டால்தான் பண்பாட்டுப் புரட்சி, நாகரீகப் புரட்சி என்னும் இரண்டையும் செய்யமுடியும் என நம்புகிறவர். அப்பொழுதுதான் மொழிவெறி, ஆதிக்கம், ஏகாதிபத்தியம், சுரண்டல் ..... முதலியவை ஒழியும். அதன் அடிப்படையில் எல்லா இனங்களும் தன்மானத்தோடும், தன்னுரிமையோடும், தனக்கே உரிய பெருமையோடும் வாழ முடியும் என்ற தத்துவத்தை விளக்கும் இந்துமதத்தின் வாயிலாகச் செயல்படும் ஒரு சமுதாய மறுமலர்ச்சி இயக்கமாக [பண்பாட்டுக் கழகம் = A Cultural Organization] வளருவோம்.

எனவே, நம்மிடையே கடுமையான சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், முறையான நிறுவன அமைப்புகளும், முழுமையான நிர்வாக ஒழுங்குகளும் இருந்தே ஆக வேண்டும். அதனால்தான், குருதேவராக மட்டும் இல்லாமல் தலைவராகவும் இருக்கின்ற யாம்; எச்சரிக்கைகளையும், கண்டிப்புக்களையும், உடனுக்குடன் கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகளையுமே எடுத்திடுகின்றோம். இதனை நம்மவர்கள் புரிந்து பொறுமையாக பொறுப்போடு ஏற்றுச் செயல்பட வேண்டும். தாங்களும் அ.வி.தி. அமைப்புப் பொறுப்பாளர்களுள் ஒருவராக நியமிக்கப் படுகிறீர்கள். **குருவாணை**.

4) தாங்கள் அனுப்பிய ரூ.80 குருகாணிக்கை கிடைத்தது.

**<u>குறிப்பு</u>**:- குருதேவர் ஏடு தொடர்பான சந்தா, நன்கொடை அனைத்தும் நமது பொறுப்பாளர் குமாரின் [56, N.G.O. காலனி, பொன்னேரி-601204] நேரடி முகவரிக்குத்தான் அனுப்பப்பட வேண்டும். **குருவாணை. எச்சரிக்கை.**

5) ஏப்ரல் 1ஆம் தேதி உத்திரமேரூரில் சென்னை செங்கற்பட்டு மாவட்டத்தார் நிகழ்த்தப் போகும் இந்துமதத் தத்துவ விழா அறிக்கை இத்துடன் அனுப்பப்படுகிறது. நீங்கள் ஏப்ரல் 2இல் R.V.பட்டியில் நிகழ்த்தப் போகும் இந்துமதச் சித்தாந்த விழா [அ.வி.தி. கிளை, யாகச்சாலை] அறிக்கை சேவுகனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இரண்டையும் ஒரே விளம்பரத் தாளில் அச்சிட்டு வழங்குக (நோட்டீசு).

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**

**16/3/84.**

**//உண்மை நகல்//**

**<u>நகல் நல்குபவர்</u>**:

அருள்மிகு வேம்படிதாளம் காமகோடிப் பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி.

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

5/4/84,
பெரம்பூர்.

# செயல்நலம் பாராட்டு மடல்

அனுப்புனர்:-

அருள்மிகு சோழப்பெருமண்டல
அருளாட்சித் திருவோலக்க நாயகம்,
ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசத்தி ஆதீனம்,
பதினெண்சித்தர் குருவழி வாரிசு கொண்டருளு குரிசில்,
சித்தர் மகன், சித்தரடியார், தெய்வீகாச்சாரியார்,
சோ.இரவீந்திரன்.

பெறுநர்:

உயர்திரு P.டில்லி அவர்கள்,
[S/O. பரசுராம ரெட்டியார், எண்:15, ஆசூரித் தெரு, திருவள்ளூர் (P.O.), செங்கை மாவட்டம்].

பேரன்புடைய பெரியீர்!

1. தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமாகிட, நன்மையாகிட, உண்மையாகிட வாழ்த்துகிறோம்.

2. நேற்று இரவு 10.00 மணிக்கு இல்லம் திரும்பிய எமது குருதேவர் தங்களைப் பற்றியும்; தங்களின் எடுப்பான, மிடுக்கான, அடக்கமான தோற்றம் பற்றியும்; சித்தர் பாடல்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருப்பதைப் பற்றியும்; சமுதாயத்திற்கு நன்மை செய்யும் தங்களின் பரந்த விரிந்த செயல்திறம் பற்றியும்; ... விதந்து, வியந்து, நெடிய நேரம் கூறினர். யாம், தங்களையும், நண்பர்களையும்

காண பேரார்வம் கொண்டுள்ளோம். ஏனெனில், யாம் கடந்த 6 மாத காலமாக தமிழகம் முழுதும் மின்னல்வேகச் சுற்றுப்பயணம் முடித்துத் தற்போதுதான் திரும்பினோம். குருதேவருடன் இருந்து அணுக்கத் தொண்டு செய்து வருபவன் என்பதால்; குருவின் ஆணை பெற்று இவ்வஞ்சலை எழுதுகிறேன்.

3) இம் மண்ணுலகம் தோன்றி 500 கோடியாண்டுகளில் சித்தர்களைத் தவிர தோன்றிய அருளாளர்கள் யாராவது தமக்குச் சமமாக ஓர் அடியானையாவது தோற்றுவித்து இருக்கின்றனர்களா? இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! ஆனால், எமது குருதேவரோ! தமது காடோடி, கடலோடி, நாடோடி வாழ்க்கையில் கழித்திட்ட 36 ஆண்டுக் கால வாழ்விலும், தற்போது உலகியலில் இருந்து வரும் 12 ஆண்டுக் கால வாழ்விலும் தமக்குச் சமமாகவே பல நூறுயிரக்கணக்கான அடியான்களை, அடியாள்களை, அடியார்களை ... உருவாக்கியுள்ளார். இது அவரின் பரந்த விரிந்த போக்கையே குறிக்கின்றது. முதல் அரசயோகியாகவும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாகவும், எளிமையான முறையில் மக்கள் தொண்டனாக வாழ்ந்து வருபவரே இன்றைய ஞாலகுரு, ஞானகுரு, இந்துமதத் தந்தை, ஞானத் தந்தை, குருமகாசன்னிதானம் சித்தர் கருவூறார் அவர்கள்.

4. பெரியாரின் குறிக்கோள்களுக்கும், கொள்கைகளுக்கும் வருங்காலம் உண்டா? இல்லையா? எனத் தெரியாமல் செயல்பட்டு வரும் கருஞ்சட்டை படைவீரர்களுக்கிடையில்; எதையும் ஆராயாமல் கண்மூடித்தனமாக மறந்தும், துறந்தும், வெறுத்தும் செயல்பட்டிடும் மார்க்சீய தோழர்களால் இந்தியாவில் மார்க்சீயம் மரணம் அடைந்து விடுமா? இல்லையா? என்ற காலக்கட்டத்திலும்; எண்ணற்ற இந்துமத அருளாளர்கள் எத்தனை முயன்றாலும் இந்துமதம் பிழைக்குமா? தழைக்குமா? என்ற வினா கடைசி வரை இருக்கும் காலச்

சூழலிலும்; அனைத்தும் ஏற்றுச் “சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்” அமைத்துச் செயல்பட இ.ம.இ., அ.வி.தி., அ.ஆ.க., உ.ம.ஆ.கு., ... முதலிய அமைப்புக்களை உள்ளடக்கிய சித்தர்நெறி பாரம்பரியத் தலைவருடன் எண்ணற்ற அடியான்கள் புறப்பட்டு விட்டனர்.

5. தங்களைப் போன்ற பெரியவர்கள் இணைந்து செயல்படுவதன் மூலமே அனைத்து ஏமாற்றங்களும் மாற்றப்படும். இத்துடன் அனுப்பியுள்ள அறிக்கைகளையும் குருதேவர் ஏடு 1+1+1=3யும் படித்துப் பிறர்க்கும் பயன்படுத்துக! உடன் பதில் தேவை.

அன்பே சிவம்.

ஓம் திருச்சிற்றம்பலம்

**அன்பு**
**சித்தரடியார், சித்தர் மகன்,**
**தெய்வீகாச்சாரியார் சோ.இரவீந்திரன்,**
5/4/84.

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்:

அருள்மிகு வேம்படிதாளம் காமகோடிப் பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி, 9/4/84.

**//இதன் மூல நகல்: வேம்பை சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# வளவளர்ச்சி வழிகளைச் சிந்தித்து உருவாக்க வேண்டும் திருவோலை

தலைவர், குருதேவர், ஞானத் தந்தை, சித்தர் கருவூரர் 2/6/84இல் தமது அருட்படை வியூக நாயகம் அழகுமலைப் பிள்ளை சமூகத்திற்கு விடுக்கும் **வ.வ.சி.உ.வே.தி.**

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! குருவே அனைத்துக்கும் கரு! குருவும் திருவும் ஒன்றே! குருவழியே அருளுலகப் பெருவழி! ... என்ற பேருண்மைகளை உணர்த்தித்தான் பீடாதிபதிகள் இந்துமத மலர்ச்சி, வளவளர்ச்சி, உரிமை மீட்சி, பெருமை ஆட்சி ... முதலிய சாதனைகளைச் சாதித்துள்ளார்கள். எனவே குருவை மதிப்பதும், குருவோடு இரண்டறக் கலந்து ஒன்றுவதும், குருவைப் புரிந்து குருவின் பதிலியாகவே வாழ்வதும்தான் அருளாட்சி அமைக்கப் பேருதவி புரிந்திடும். இவற்றை நினைவுபடுத்திட வேண்டிய நிலைகள் கவலைப்படுமளவு வளர்ந்து விட்டன.

2) திருநாள் முறை, சடங்கு நெறி, விழாக் கோல வழி ... முதலியவை கரு, குரு, தரு, திரு ... முதலியவர்களின் நிலைகளைப் பொதுமக்கள் அநுபவப் பூர்வமாக அறிந்து கொள்ள உருவாக்கப் பட்டவையேயாகும். ஆனால், இவைதான் அனைத்துமல்ல. இந்துமதத்தால்தான் மொழி உணர்வின் விழிச்சியும், இன உணர்வின் எழுச்சியும், நாட்டு உணர்வின் செழிச்சியும் உயர்ச்சி பெறும்! மலர்ச்சி பெறும்! வளவளர்ச்சி பெறும்!

3) பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி உருவாக்கிய அருட்பேரரசு (The Divine Kingdom 785 AD - 1279 AD) தமிழ்மொழியையோ, இனத்தையோ முழுமையாக வடிவப்படுத்தி; வளமும், வலிவும், நீடித்த ஒற்றுமையும், நிலையான வல்லமையும் பெறுமாறு செய்யாமல்; அன்னிய மொழிக்கும், அன்னியர்க்கும் அடிமைப்பட்டுச் சீரழிந்து சிதைந்தது. அதற்குக் காரணம் குருவைப் புரிந்து, முழுமையாக ஏற்று அவரின் ஆணை வழியே நிற்காமல் தான்தோன்றித்தனமாகச் செயல்பட்டமையே. அவரும் மனமுடைந்து நிலவறைக்குள் சென்று விட்டார். அதேநிலை, இனியும் வரக் கூடாது.

தமிழர்களை ஒற்றுமைப் படுத்திட; தன்னம்பிக்கை பெறுமாறு செய்திட; இன உணர்வும், மொழி உணர்வும் பெற்று உரிமைப் போர் புரியும் வீரம் பெற்றிடச் செய்யும் ஒரே சத்தி **தமிழரின் மதமான இந்துமதத்துக்குத்தான் உண்டு**. எனவே, இந்துமதத்தின் வரலாறு, தத்துவம், நடைமுறை, செயல்நிலை, இலக்கியம் [ஆகியவற்றில்] ஏட்டறிவையும், பட்டறிவையும் குறிப்பிட்ட அளவு வழங்கித்தான் அருட்படை திரட்ட வேண்டும். இவற்றிற்காக யாம் படித்த கூட்டத்தைச் சந்திக்கவே விரும்புகிறோம். நாத்திகர், பகுத்தறிவாளர், மத மறுப்பாளர், மத விரோதி, மதத் துரோகி, மத நாட்டமற்ற அப்பாவி ... முதலியோர்கள் முழு விளக்கம் பெற்றிடவே யாம் குருதேவர் ஏடு, நூல்கள், அறிக்கைகள் அச்சிடுவதோடு; சொற்பொழிவு, கருத்துரை, விவாதம், உரையாடல் வழங்கச் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறோம். இதனைப் புரியாது பணம், பதவி, ஆடம்பரம், கேளிக்கை விரும்புவோர்; குருதேவருடன் இருப்பதை விட விழாதான் வேண்டுமென்று முடிவெடுக்கும் விபரீதமும், ஆபத்தும் விளைந்து விட்டன. எச்சரிக்கை. வீரமும் விவேகமும் தேவை.

4) வசதிகளை யாம் எதிர்பார்ப்பதில்லை. தங்களின் வீட்டிலேயே தங்கிச் செயல்படவும் தயாராக உள்ளோம். 9, 10, 11 Junction Retiring room ஏற்பாடு செய்க. 9 மட்டும் மங்கம்மா சத்திர அறை இருக்கட்டும். கூட்டத்தைப் பொறுத்து மூன்று நாட்களுக்கு நீடிக்கலாம். 12-6-84 காலைதான் பால்குட விழாவுக்குப் புறப்படுவோம். உலக அருளாளர்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள் ஆணைப்படிதான் யாம் செயல்பட இயலும். 10இல் மதுரை மீனாட்சி ஆலயம் செல்வோம்.

**சித்தர் கருவூரார்,**
**2/6/84.**

**//உண்மை நகல்//**

<u>நகல் நல்குபவர்</u>:-
அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு சித்தரடியார் சீ.மணி.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அருளுலக இளவரசுகள் அறிவிப்புப் பயண வெற்றி நன்றி மடல்

**[18-6-84 முதல் 24-6-84 முடிய நெல்லை மாவட்டச் சுற்றுப்பயணம்]**

இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, 25/6/84இல் அருள்மிகு கன்னியாகுமரி அம்மன் சன்னிதானம் S.செந்தில்ராசு B.E. [75, சிவன் தெற்கு இரத வீதி, பாளையங்கோட்டை Post, திருநெல்வேலி மாவட்டம் - 627002] அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் **அ.இ.அ.ப.வெ.ந. மடல்**.

1)

**'அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!'**

**'எல்லாம் நன்மைக்கே!'**

**'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!'**

**'பிறர்க்குப் பணி செய்தலே தம்மை அணி செய்யும்!'**

**'அருளை வழங்குபவரும் பெறுபவரும் பொருளுலக இருள்களை அகற்றும் ஞான விளக்குகளாகிடுவர்!'**

**'சித்தர்களால் அருளை அநுபவப் பொருளாகப் பெறுபவர் அநுபூதிமான்கள்!'**

**'அருள்மழையால்தான் நாடு, மொழி, இனம், சாதி, பணம், பதவி, பட்டம், புகழ் ... என்ற வெறியர்களின் வெப்பக் கொடுமைகளைத் தணிக்க முடியும்!'**

**‘சித்தர்நெறியே மானுட வாழ்வுக்கும், வாழ்வைக் கடந்த நிலைகளுக்கும் விளக்கமளிக்கிறது!’**

**‘தான், தன்னவர், உலகம் என்ற மூன்றையும் ஏற்றபடி போற்றிப் பேணி வாழக் கற்றுக் கொடுப்பதே சித்தர் நெறி!’**

**‘மனித மனம் பசுமையாகவும், மென்மையாகவும், அன்பாகவும், ஈரமாகவும், வளமாகவும், வாலிப்பாகவும், பொலிவாகவும், உண்மையாகவும், நன்மையாகவும், பொறுமையாகவும், பொறுப்பாகவும் ... பக்குவமாக இருந்திடச் செய்வதே சித்தர்நெறியான இந்துமதம்!’**

என்ற குருபாரம்பரியக் கருத்துக்களை எமது சுற்றுப்பயணம் மீண்டும் மீண்டும் நினைவு கூரச் செய்தது. இதற்குக் காரணம் தங்களின் அன்னை, தம்பி, தங்கை, சின்னையா, நண்பர், உறவினர் ... முதலிய அனைவரும் பாசப் பிணைப்போடு உண்மையாகப் பழகியதுதான். அனைவருக்கும் எமது நன்றி! வாழ்த்து! போற்றுதல்! உரித்தாகட்டும். அனைவரின் அன்பையும் மதிக்கிறோம்!

2) எமது எதிர்பார்ப்புக்களை விட எல்லாப் பயணங்களும் மிகுந்த வசதிவாய்ப்புக்களுடன் அமைந்திட்டன. அனைத்து இடங்களிலும் எமது செல்வங்களை நன்கு அருளுலக இளவரசர்களாக அறிவிக்க முடிந்தது. சற்றும் எதிர்பாராமல் எமக்கு ஆபத்தான சூழல்கள் கார்மேகங்களாகச் சூழ்ந்து விட்டன. எனவேதான், ‘வரு முன் காத்தல்’ என்ற தத்துவப்படி

**‘மனிதர்களைக் கடவுளாக்குவதும்’,**

**‘கருவறைகளில் சிறைப்பட்டுக் கிடக்கும் கடவுள்களை விடுவிப்பதும்’,**

**‘அருள்நலம் குன்றிய வழிபாட்டு நிலையங்களைப் புத்துயிர்ப்புச் செய்வதும்’,**

**‘தமிழ்நாடு, மொழி, இனம் என்ற உணர்வால் தமிழர்களை ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்படச் செய்தால்தான் சமய, சமுதாய விடுதலைப் புரட்சிகள் வெற்றி பெறும் என்ற திட்டத்தைச் செயலாக்குவதும்’,**

**‘உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்குவதும்’,**

**‘அருளுலகச் சுரண்டல்கள், சூழ்ச்சிகள், வீழ்ச்சிகள், தாழ்ச்சிகள், ஏமாற்றங்கள், மடமைகள், இயலாமைகள், இல்லாமைகள் … முதலிய அனைத்தையும் முழுமையாக அகற்றும் புரட்சித் திட்டத்தைச் செயலாக்குவதும்’,**

… இந்தச் சுற்றுப்பயணத்தின் மூலம் தென்னகத்தில் சிறந்த வளவளர்ச்சிகளைப் பெற்றிட்டன. இதற்காகச் செந்தில்ராசு என்ற தனிமனிதன் இ.ம.இ. வரலாற்றில் சிறப்பான முதன்மை இடத்தைப் பெறுகின்றான். வாழ்க அவன் புகழ்! வளர்க அவன் பணிகள்!

3) இனிய நண்ப! யாம் வழிநெடுகப் புகைவண்டி நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும், வழிபாட்டு நிலையங்களிலும், தங்கும் விடுதிகளிலும், அங்காடிகளிலும் சந்தித்த மக்களின் அக்கரையும், ஆர்வமும், ஈர்ப்பும், ஈடுபாடும், விருப்பும் … எம்மைப் பெருமகிழ்வுக்கும், நம்பிக்கைக்கும் உரியவனாக்கி யுள்ளன. எனவே, தன்மானம் நலிந்தும், தன்னம்பிக்கை மெலிந்தும், மொழிப்பற்று நசித்தும், இனப்பற்றுக் குறைந்தும், நாட்டுப்பற்றுக் கெட்டும் … சிதைந்து கிடக்கும் தமிழர்களை உறுதியாக விழிச்சி யுற்றிட, எழுச்சி பெற்றிட, செழுச்சி யடைந்திடச் செய்ய

முடியும் எம்மால் என்ற புத்துணர்வும், தெம்பும், தெளிவும் பிறந்துள்ளன.

ஏனெனில், இம்மண்ணுலக மக்களனைவரையும் ஒரே குடும்பத்தவர் போல் பற்றோடும், பாசத்தோடும், ஒற்றுமையோடும் வாழச் செய்யும் சித்தர்நெறியின் நாற்றங்கால் தமிழர்கள்தான். அதனால், இவர்கள் ஒன்றுபட்டு, ஒற்றுமையாகி ஒருமித்த நிலையில் பாடுபட்டுப் போராடி உரிமையும், பெருமையுமுள்ள விடுதலை வாழ்வு அமைத்திட்டால்தான் உலகம் சித்தர் நெறியைப் புரிய நேரிடும்! விரும்ப நேரிடும்! நம்ப நேரிடும்! அதற்காகவாவது சாதிகளால், மதங்களால், கட்சிகளால், அன்னியர்களால் ... வேறுபடுத்தப் பட்டுக் கூறுபாடுகளும், மாறுபாடுகளும், முரண்பாடுகளும் மிகுந்த சமுதாயமாக இருக்கும் தமிழர் சமுதாயம் இந்துமதத்தின் பெயரால் மட்டுமே ஒன்றுபட்டு ஒற்றுமை பெற்றிடச் செய்யும் முயற்சிகள் துவக்கப் பட்டுள்ளன. இவை உறுதியாக வெற்றி பெறும்! நன்மைமிகு பயன்களை நிலையாக நல்கும்!

4) நண்ப! எமது கடலோடிக் காடோடி நாடோடி வாழ்விலும் சரி! இன்றைய வாழ்விலும் சரி! எம்மால் எதிர்பார்க்கப்படும் அற்புத மனிதர்கள் இன்னும் உரிய பெரிய அளவில் கிடைக்கவில்லை. எமக்கு ஏக்கமும், துக்கமும் மிகுகின்ற நிலைகள் தோன்றித் தோன்றி மறைகின்றன. இருந்தாலும் யாம் கண் சோர்ந்தோ! கை சோர்ந்தோ! உடல் தளர்ந்தோ! மனம் அயர்ந்தோ! சிந்தை நொந்தோ! உணர்வு மயங்கியோ! ..... செயல்நலம் குன்றிடவில்லை. எமது அச்சங்களோ! கூச்சங்களோ! மாச்சரியங்களோ! நினைவாற்றல் தேய்வோ! ... தமிழினம் காத்திட்ட அறிவுச்செல்வங்களை உலகம் பெற முடியாதபடி புதைபொருள்களாக்கிடுமோ என்றுதான் அஞ்சுகிறோம் யாம்.

5) யாம், பொருளுக்கு அருளை விற்கவில்லை. ஆனால், அருளாளர்களைத் தயாரிக்கப் பல செய்திகளை அச்சிடவும்; அடிக்கடி சுற்றுப் பயணம் செய்யவும், பூசைகள் செய்யவும் பொருள் தேவை. எனவேதான் நன்கொடை, காணிக்கை, அன்பளிப்பு முதலியவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் யாமுள்ளோம். தாங்களும், தங்களது குடும்பத்தாரும், நண்பர்களும் எம்மைப் பற்றி நன்கு அறிமுகம் செய்ய வேண்டும். எமது கொள்கை, குறிக்கோள், நோக்கு, போக்கு, ஊக்கு ... முதலிய அனைத்துமே **பதினெண்சித்தர்கள் பைந்தமிழில் எழுதிப் பிறர் வாசிக்க வழங்கிய வாசகங்களையும்; எழுதாமல் ஓதியே பிறர் உணரக் கூடிய வண்ணம் வழங்கிய வாக்குகளையும் நடைமுறைப் படுத்துவதாகத்தான் உள்ளன!** உணர்க! உணர்த்துக!

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூறார்,**

**25-6-84.**

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்:

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, சித்தரடியார் சீ.மணி.

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# அருளாட்சிக்கான தீரத் தியாகத் திட்ட விளக்க மடல்

ஞாலகுரு சித்தர் கருவூரர் 7/3/85இல் கலிங்க நாட்டிலிருக்கும் சுந்தரராமன் வட்டாரத்துக்கு விடுக்கும் (Meenakshi Traders, Buxi Bazaar, Cuttack - 753001) **அ.தீ.தி.தி.வி.** மடல்:

1. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே என்று அருளுலக ஆணைகளை நிறைவேற்றும் அருளாட்சி நாயகமாக மட்டுமே இந்தக் கலிகாலச் சிவன், முருகன், இராமன், கண்ணன்,.... உள்ளான். எனவேதான், எல்லையற்ற ஆற்றலும், ஆழமான அறிவும், பரந்த அநுபவமும் இருந்தும் கூட.... இலைமறை காயாகவே செத்தாரை ஒத்துச் செயல் தேங்கிச் செயல்பட வேண்டியுள்ளது.

2. தத்துவப் புரட்சிக்காக [Idealogical Revolution] அறிக்கைகளும், சிறிய நூல்களும், கையெழுத்துப் பிறதிகளும், சுற்றுப்பயண உரையாடல்களும்..... செய்ய வேண்டியுள்ளது. நல்ல முறையான வளர்ச்சியும், தியாக தீரப் பக்குவமும் உடைய உங்களைப் போன்றோர் விரைந்தும் விரிந்தும் வழங்கும் உதவிகளே செயல்நிலைகளை வளமாக்கும்.

3. உடனடியாகக் குறைந்தது ரூ 3000/- கடனுகப் பெற்று அனுப்பினால் 'கருவூரரின் கீதை', 'பத்தி முறை', 'சத்தி வழிபாடு',

‘இந்துமத அறிமுகம்’, ‘குண்டலினி’, ‘குடமுழுக்கு’.... என்ற நூல்களை வெளியிடலாம். நீங்கள் மாதாமாதம் கடனை அடைக்கலாம். அப்பொழுதுதான் பொறுப்பு, பொறுமை, கடமை, கட்டுப்பாடு.... முதலியவை பிழைக்கும், தழைக்கும், உழைக்கும். ஊசலாட்டமே கூடாது.

உண்மையான மதவாதிகளைத் திரட்டி அருளை அநுபவப் பொருளாக வழங்கி அருளாட்சி அமைக்கும் பணிக்கு நிறுவனப் பெருக்கமும், நிர்வாக ஒழுங்கும் வளர்க்கப் பட்டேயாக வேண்டும். விளையாட்டுத்தனமான விளக்கில் விழும் விட்டில் போல் நாடோடி வாழ்வில் நாட்டம் வேண்டாம்! கண்டிக்கிறோம்.

4. இந்த 500 கோடி ஆண்டில் நடக்காத ஒன்று 18.2.85 திங்கள், மாசி அமாவாசைச் சிவராத்திரியில் சுடுகாட்டில் ஏழு பேர்களை {கவிக்குமார், சத்தியமூர்த்தி, இரவீந்திரன், ரகுராமன் (தஞ்சைப் பார்ப்பான்), சுப்பிரமணி (சத்தி பூசை), சண்முகம், (DM) பெ.சுப்பையா B.E.} ஈசுவரர்களாகவே அறிவித்து மண்ணில் விண்ணுலகக் கடவுள்களை (வழிபடு நிலையினர்) உருவாக்கி விட்டோம். இதன் விளைவுகள் ஆராயப் படுகின்றன.

- பொருள்வளம் இல்லாததாலேயே அனைத்தும் தேக்கம், மந்தம். புரிந்து செயல்படுக! சுறுசுறுப்பாகச் செயல்படுக! - விசுவாமித்திரரின் திரிசங்கு சொர்க்கச் சாதனையை விடப் பலகோடி மடங்கு பெரிய சாதனையே ஈசுவரர்களை உருவாக்கும் சாதனை.

5. வீட்டுக்கோர் ஆள், எல்லோரும் இயன்ற பொருளுதவி.... என்று நமக்கு ஆதரவு பெருகிடச் சொற்பொழிவுகளும்,

அச்சிட்டவைகளும் பெருகிட வேண்டும். நீங்களும் தொல்லை தரக் கூடாது.

**<u>உண்மையான இந்து மதமே!</u> இந்தியப் பண்பாடு, இந்தியர்கள், இந்துக்கள் என்ற சொற்களின் அடிப்படை**. அனைத்து மொழியினரும் விடுதலை பெற்ற கூட்டாட்சி இந்தியாவில் அமைய அனைத்து மொழிகளையும் கெடுக்கும் வடஆரியரும், பிருமணரும் ஒரு முடிவுக்கு வந்து தனித்தன்மை அழிந்து அனைத்தோடும் கலக்க வேண்டும். இல்லையேல், பீடாதிபதிகளின் வாக்குகள் செயலாகிச் சாம்பலாக்கப்படுவர்; இந்திய ஒற்றுமை இந்து மதத்தால்தான் நிலைக்கும். இந்தியாவை இ.ம.இ.தான் காக்க முடியும்.

அருளாட்சிக்காக ஓயாது பேசுங்கள்! எழுதுங்கள்! பூசை செய்யுங்கள். மிகப் பெரிய முழுமை மாற்றப் புரட்சி எளிதல்ல! அதுவும் அருட்புரட்சி அன்பு வழியில். உணர்க! உணர்த்துக! செய்யும் பணியைச் சிறப்பாகச் செய்க.

**குருவாணை.**

**சித்தர் கருவூரர்.**

**7/3/85.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தர் மகன் சுந்தரராமனின் கையெழுத்தில் இருந்தது.//**

# விடுதலை

**நிறுவனர் - தந்தை பெரியார்**

***மலர் 48, பெரியார் ஆண்டு 105, மாதம் உழைப்பு நாள் 9, சென்னை புதன் 25.1.84, இதழ் 231 பக்கம் 2 முதல்பத்தி.***

## நாம் ஏன் சூத்திரன்?

உன் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தாயா? திராவிடனுக்கு எங்காவது குழவிக்கல் பொம்மை சாமியிருந்தது என்று எழுதப் பட்டிருக்கிறதா அதில்? அப்படித்தான் உனக்கு ஒரு சாமி வேண்டுமென்றால் அது உன்னைப் போல் அல்லவா இருக்க வேண்டும்? உன்னைத் தொட்டாலும், உன் நிழல் பட்டாலும் தான் செத்துப் போவதாகக் கூறுவதா உனக்கு சாமி? வெட்கமில்லையா உனக்கு? கோயில் கட்டுவதும் நீ, கும்பாபிசேகம் செய்வதற்குப் பொருள் கொடுப்பது நீ. சாமியின் பூசைக்கும், சாப்பாட்டிற்கும் படியளப்பதும் நீ. அந்தச் சாமிக்கு தன்னைப் போல் உச்சிக்குடுமி வைத்து விட்டு தன்னைப் போல் பூணூலும் போட்டுவிட்டு நீ கொடுத்த துணியைத் தன்னைப் போல் பஞ்ச கச்சம் வைத்து அதற்கு உடுத்தி விட்டு அதன்மீது மாட்டு மூத்திரத்தைத் தெளித்து விட்டு 'சாமிக்கு உயிர் வந்துடுத்து, இனி எட்டி நில், தொடாதே' என்று உன்னிடம் கூறிவிடுகிறானே பார்ப்பான். நீ அவனையும் தொடக் கூடாது, சாமியையும் தொடக் கூடாது. நீ அவன் சாப்பிடும்போதும் பார்க்கக் கூடாது, அந்தச் சாமி சாப்பிடும் போதும் பார்க்கக் கூடாது. ஆனால், இரண்டு பேருக்கும் நீ தானே படியளக்க வேண்டும்? இது யோக்கியமா? ஏமாற்றுதல் அல்லவா? என்று கேட்டால் இதற்கா நாத்திகம் என்று பெயர் கொடுப்பது?

..... ..... ..... .....

ஆகவே உங்களை யெல்லாம் சரியா? தப்பா? என்று பகுத்தறிவு கொண்டுதான் நடக்கும்படி சொல்லுகிறோம். இதற்கா நாங்கள் நாத்திகர்களாக்கப் படுவது? இதற்காக நாங்கள் நரகத்திற்குப் போக வேண்டும்? உண்மையான கடவுள் இருந்தால் அவர் பேரைச்

சொல்லி மக்களை வஞ்சித்து வரும் இந்தப் பார்ப்பனர்களை அன்றே நரகத்திற்கு அனுப்பி விட்டு நமக்கு மகிழ்ச்சி செய்து அனுப்பி வைப்பார்?

இதைக் கேட்பதா நாத்திகம்? இந்த அக்கிரமங்களைக் கண்டு இரத்தம் துடிக்க வேண்டாமா உங்களுக்கு? எங்களை நாத்திகர்களென்று கூறும் இவர்கள் மட்டுமென்ன மகா பத்தர்களா? எவனாவது கடவுள் காப்பாற்றித் தருவார் என்று நினைத்துத் தன்னுடைய பணத்தை மேசை மீது வைத்து விட்டுப் போனாலும் அந்தப் பணம் அப்படியே இருக்குமே? கடவுள் காவல் இருக்கும்போது பணம் வைக்க இரும்புப் பெட்டி ஏன்? அதற்குப் பூட்டு ஏன்? அந்தக் கடவுளின் நகைகளுக்குத்தான் ஒரு பெட்டி ஏன்? அவரது கோயிலுக்குத்தான் ஒரு பூட்டு ஏன்? அவரையே ஜெயில் கைதி மாதிரி பூட்டி வைப்பதேன்? அப்படிப் பூட்டுப் போட்டும் கூட அவரைப் பெயர்த்து விட்டு அடியில் இருப்பதை அடித்துக் கொண்டு போவானேன்? கோயில் நகைகள் கொள்ளை போவதேன்?

அன்பர்களே! கோயிலும் கடவுளும் மதங்களும் பார்ப்பனர் தம் வாழ்வுக்காக வகுத்துக் கொண்ட வழிகள். அவை இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி இருக்க வேண்டுமென்றாலும் அறிவுக்கேற்ற ஒரு நாணயமான பாரபட்சமற்ற கடவுளை வணங்குங்கள். உங்களை இழிவுபடுத்தாத, முட்டாள்களாக்கி வைக்காத ஒரு மதத்தை தழுவி நடவுங்கள் என்றுதான் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**ஈ.வெ.ரா.**

**(திருவண்ணாமலை மாநாட்டுத் தலைமை உரை, 14-12-1947)**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இந்த நகல் திரு ஏ.இரவி அவர்களின் கோப்புக்களில் இருந்து கிடைத்தது.//**

**"கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**



"... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் வடஆரியர்களின் வேதமத மாயையிலிருந்தும், சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவித்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப் பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார் ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org